19/10/2001

**சுருக்கம்**

**ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் - அரசு உதவி பெறாத அங்கீகாரம் பெற்ற தனியார் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் - மாணவர் சேர்க்கை - 2001-2002ஆம் கல்வியாண்டிலிருந்து 50 : 50 முறை அமுல்படுத்துதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.**

---

**பள்ளிக் கல்வி (யு1)த் துறை**

***அரசாணை (நிலை) எண்.176*** ***நாள் 18.10.2001.***

படிக்கப்பட்டவை

1.அரசாணை (நிலை) எண். 111, பள்ளிக் கல்வி நாள் 7.8.2001.
2. அரசாணை (நிலை) எண். 112, பள்ளிக் கல்வி நாள் 7.8.2001.
3. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கடித எண்.10203/சி3/2001, 14.8.2001 மற்றும் 16.8.2001

---

**ஆணை**

St. Stephens College Vs University of Delhi என்ற வழக்கில் உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பிற்கிணங்க சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் சிறுபான்மை சமூகத்தினருக்கு மாணவர் சேர்க்கையில் 50% இடத்திற்கு மிகாமலும், சிறுபான்மையல்லாத சமூகத்தினருக்கு 50% இடமும் ஒதுக்குவதற்கான 50 : 50 என்ற முறையை செயல்படுத்த அரசாணை (நிலை) எண். 556 கல்வி நாள், 15.6.92ல் ஆணை வெளியிடப்பட்டது. நிர்வாகக் காரணங்களினால் இம்முறையை செயல்படுத்துவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் 9.11.96 மற்றும் 26.7.99 நாளிட்ட கடிதங்களில், சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் 50 : 50 முறையை அமுல்படுத்துமாறு புதுடெல்லி தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் வலியுறுத்தியுள்ளது. மேலும் மாணவர்கள் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனவும் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் வலியுறுத்தியுள்ளது.

2. இது தவிர சி.எஸ்.ஐ. திருச்சபை நடத்தும் மதுரை மாவட்டம் திருமங்கலம் டி.எம்.ஆர். ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு விண்ணப்பித்து அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தும் தனக்கு சேர்க்கை இடம் கிடைக்காததால் தனக்கு ஒரு இடம் அளிக்க வேண்டும் என செல்வி டி. ஜெயலட்சுமி என்ற மாணவி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார் (ரிட் மனு எண். 17124/2000). இவ்வழக்கின் தீர்ப்பில், சிறுபான்மை நிறுவனங்களில் 50% இடங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்புகளுக்கிணங்க சிறுபான்மையல்லாதவர்களுக்கு வழங்க வகையிருந்தும் அவ்வாறு வழங்கப்படாதது குறித்து சென்னை உயர்நீதி மன்றம் கருத்து தெரிவித்து 50% இடங்களை சிறுபான்மையினரைக் கொண்டு நிரப்பவும், மீதி 50% இடங்களை சிறுபான்மையரல்லாதவர்களைக் கொண்டு நிரப்பவும் 19.1.2001ல் தீர்ப்பளித்துள்ளது. செல்வி ஜி. மஞ்சுளா என்ற மாணவி திருப்பத்தூர் மேரி இம்மாகுலேட் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு எதிராக தொடர்ந்த வழக்கிலும

(ரிட் மனு எண். 17914/2000) மேற்குறிப்பிட்டுள்ள கருத்தே நீதிமன்றத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளது. இத்தீர்ப்பினை எதிர்த்து டி.எம்.ஆர். ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு மனுவில் (எண். 51/2001) 24.7.2001ல் வழங்கப்பட்ட தீர்ப்பிலும், J.P. Unnikrishnan Vs. State of Andhra Pradesh என்ற வழக்கில் உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு Shahal H. Musaliar and Another etc. Vs. State of Kerala and others etc (1993 4 SCC 112) என்ற வழக்கில் உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பினை சுட்டிக்காட்டி உதவி பெறாத சிறுபான்மை நிறுவனங்களில் கூட 50 : 50 முறையை அமுல்படுத்தலாமெனவும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உயர் கல்வித் துறையில் உதவி பெறாத சிறுபான்மை பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையில் அரசாணை நிலை எண். 220, உயர் கல்வி நாள் 1.6.98 மற்றும் 270 உயர் கல்வி நாள் 17.6.98-ன்படி கடைபிடிக்கப்பட்டு வரும் முறையும் ஆராயப்பட்டது.

3. இவையனைத்தையும் அரசு கவனமாக தீர ஆராய்ந்தபின் அரசு உதவி பெறாத அங்கீகாரம் பெற்ற தனியார் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும், 2001-2002ம் கல்வியாண்டு முதல் மாணவ/மாணவியர் சேர்க்கையில் 50 : 50 முறையை கடைப்பிடிக்கும்படி (அதாவது தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் அனுமதித்த மொத்த சேர்க்கை இடங்களில் 50% இடங்களுக்கு சிறுபான்மையினத்து மாணவர்களைக் கொண்டு அந்தந்த நிறுவனங்களால் நிரப்புவதும், மீதி 50% இடங்களை சிறுபான்மையல்லாத சமூக மாணவர்களைக் கொண்டு அரசால் நிரப்புவதும் ஆகும்) ஆணையிடுகிறது. சிறுபான்மையல்லாதவருக்கான 50 சதவிகித இடங்கள் அரசு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரால் ஒற்றைச் சாளர முறையில் தகுதியான மாணவ/ மாணவிகளைக் கொண்டு நிரப்பப்படும். இந்த 50 சதவிகித இடங்களில், 25 சதவிகித இடங்கள் free seat category-ல் தற்போது அரசால் அனுமதிக்கப்படும் கட்டண விகிதத்திலும், மீதி 25 சதவிகித இடங்கள் payment seat category அடிப்படையிலும் நிரப்பப்படும். அவ்வாறு நிரப்பப்படும் Payment seat-க்கான கட்டணமானது ரூ. 13,500/-(ரூபாய் பதின்மூன்றாயிரத்து ஐநூறு) எனவும் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது. சிறுபான்மையினத்தவருக்கான 50% இடங்களை அந்த சிறுபான்மை இனத்து சமூகத்தினரைக் கொண்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களே நிரப்பவும், அவ்வாறு நிரப்பும் போது அந்த சிறுபான்மை இனத்தவருக்கான மாணவ/மாணவிகள் கிடைக்காதபட்சத்தில் அந்நிகான இடங்களை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநருக்கு சரண் செய்யவும் அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு சரண் செய்யப்பட்ட இடங்களை ஒற்றைச் சாளர முறைப்பட்டியலிருந்து தகுதி அடிப்படையில் இயக்குநரே நிரப்பிக் கொள்ளவும் அனுமதியளிக்கப்படுகிறது.

4. உச்ச நீதி மன்றம் மற்றும் உயர் நீதி மன்ற தீர்ப்புகளின்படியும், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் வலியுறுத்தியுள்ளபடியும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் 50 : 50 முறையை அமுல்படுத்த ஆணையிடப்பட்டதனைத் தொடர்ந்து சிறுபான்மையினத்தவரின் நலனை மனதில் கொண்டு அந்த இனத்து மாணவர்களின் உரிமை பாதிக்கப்படா வண்ணம் அரசு உதவி பெறாத அங்கீகாரம் பெற்ற சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் மாணவர் சேர்க்கையினை 40 லிருந்து 50ஆக (ஐம்பது) தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தின் இசைவிற்குட்பட்டு உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இம்முடிவினையொட்டி ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர் சேர்க்கை

இடங்களின் எண்ணிக்கையை [illegible]லிருந்து 80-ஆக (எண்பது) உயர்த்துவதற்கான தடையின்மைச் சான்று விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத்திடம் பெற்று அரசுக்கு அனுப்பிட ஏதுவாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்குமாறு இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேற்குறிப்பிட்டவாறு 50 : 50 என்ற முறையை 2001-2002ஆம் கல்வியாண்டு முதல் அமுல்படுத்தும் போது சிறுபான்மையின மாணவர் சேர்க்கையை 50% இடங்களுக்கு மிகாமல் அரசு உதவி பெறாத அந்தந்த சிறுபான்மையின நிறுவனங்களே கல்வித் தகுதி, வயது வரம்பு, பாடவாரி முறை போன்றவைகளுக்குட்பட்டு மேற்கொள்ளலாம் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி.கு. சுப்புராஜ்,
அரசுச் செயலாளர்.

**பெறுநர்**

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை-6.
அனைத்து உதவி பெறாத அங்கீகாரம் பெற்ற தனியார் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் தலைமையாசிரியர்கள் (ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் வழியாக)
பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை-79.
(அரசாணையை அரசிதழில் வெளியிடும் பொருட்டு)

நகல்: முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.
கல்வி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 18/10/2001